# தரம் 1 மாணவர்களுக்கான இரண்டாம் தவணைக்கு உரிய பாடங்களுக்கான பயிற்சிகளின் தொகுப்பு




ஆசிரியர்: தமிழ்ச்செல்வி நாகராசா

National.Dip.In.Teaching.Primary

MN/Pappamoddai.R.C.T.M.School






kalvi.lk

மன்/பாப்பாமோட்டை.றோ.க.த.கபாடசாலை

## இரண்டாம் தவணைப்பயிற்சிகள் - 2021

தரம் - 1 **தமிழ்மொழி**

மாணவர் பெயர் : ............................

### 01.தொடர்புபடுத்துக.

1. 

2. 

3. 

4. 

5. 

காகம்

ஏணி

குடை

நாய்

விமானம்

Miss.N.Thamilselvi ( National.Dip.In.Teaching.Primary)
Mn/Pappamoddai.R.C.T.M.School.

kalvi.lk

**02. குறில் எழுத்துக்களிற்குரிய நெடில் எழுத்துக்களை எழுதுவோம்.**

1. ம → மா
2. த →
3. ட →
4. வ →
5. ச →
6. ர →

Miss.N.Thamilselvi ( National.Dip.In.Teaching.Primary)
Mn/Pappamoddai.R.C.T.M.School.

kalvi.lk

## 03.மூவெழுத்துச் சொற்களில் விடுபட்ட எழுத்துக்களை எழுதுவோம்.

1.  → க ☐ வு

2.  → மு ☐ ல்

3  → ஆ ☐ தை

4.  → ச ☐ டி


5.  → வி ☐ றி

6.  → மே ☐ ம்


Miss.N.Thamilselvi ( National.Dip.In.Teaching.Primary)
Mn/Pappamoddai.R.C.T.M.School.

kalvi.lk

## 04. படத்தை அவதானித்து ஒருமைச் சொற்களிற்குரிய பன்மைச் சொற்களை எழுதுவோம்.

1.  → 

இலை → இலைகள்

2.  → 

பழம் → 

3.  → 

குடை → 

4.  → 

ஏணி → 

5.  → 

Miss.N.Thamilselvi ( National.Dip.In.Teaching.Primary)
Mn/Pappamoddai.R.C.T.M.School.

kalvi.lk

## 05. ஒலிமரபுச்சொற்களுக்கு உரிய படங்களை இணைப்போம்.

1. கா கா



2. வள் வள்



3. டும் டும்



4. மியாவ் மியாவ்



5. கீகீ கீகீ




Miss.N.Thamilselvi ( National.Dip.In.Teaching.Primary)
Mn/Pappamoddai.R.C.T.M.School.

kalvi.lk


## 06. நிறம் தீட்டுவோம்.

01.




சிவப்பு நிறம்

02.




மஞ்சள் நிறம்

03.



நீல நிறம்

04.




பச்சை நிறம்

Miss.N.Thamilselvi ( National.Dip.In.Teaching.Primary)
Mn/Pappamoddai.R.C.T.M.School.

kalvi.lk

## 07. பின்வரும் குறியீடுகளைப் பொருத்தமான இடத்தில் வரைவோம்.



1. நேரே செல்க.

2. இடப்பக்கம் செல்க.

3. வலப்பக்கம் செல்க.

Miss.N.Thamilselvi ( National.Dip.In.Teaching.Primary)
Mn/Pappamoddai.R.C.T.M.School.

kalvi.lk

## 08. விடுகதைகளிற்குப் பொருத்தமான படங்களை இணைப்போம்.



1. நன்றிக்கு வால் உண்டு. கோபத்திற்கு வாய் உண்டு. அது என்ன?



2. .பற்கள் இருக்கும் கடிக்க மாட்டான். அவன் யார்?



3. மழைகாலத்தில் உதவுவான். அவன் யார்?



4. காற்றைக் குடித்து காற்றிலே பறப்பான். அவன் யார்?



5. தலையைச் சீவினால் தாளிலே மேய்வான். அவன் யார்?

Miss.N.Thamilselvi ( National.Dip.In.Teaching.Primary)
Mn/Pappamoddai.R.C.T.M.School.

kalvi.lk

## 09. "விசிறி" எனும் பாடலில் வரும் சொற்களில் விடுபட்ட எழுத்துக்களை எழுதுவோம்

| |
|---|
| சி , டி , லை , ற் , னை , ல் , ம் , ழ , த |

1. ஓ ______
2. வி ______ றி
3. பாட் ______
4. கா ______ று
5. ப ______
6. வீட்டி ______
7. கவரு ______
8. அ ______ கு
9. காகி ______ ம்
10. வீசு ______

Miss.N.Thamilselvi ( National.Dip.In.Teaching.Primary)
Mn/Pappamoddai.R.C.T.M.School.

kalvi.lk

## 10. இடைவெளியில் வரவேண்டிய உமது சுய விபரத்தை எழுதுங்கள்.

# நான்



1. எனது பெயர் : ………………………………………

2. எனது அம்மாவின் பெயர் : ……………………..

3. எனது அப்பாவின் பெயர் : ……………………..

4. நான் ……………... ஆம் தரத்தில் படிக்கின்றேன்.

Miss.N.Thamilselvi ( National.Dip.In.Teaching.Primary)
Mn/Pappamoddai.R.C.T.M.School.

kalvi.lk

## 11. விரல் பொம்மை உரையாடல்.





| வினா | விடை | |
|---|---|---|
| என்ன வேண்டும்? | பழம் வேண்டும். → |  |
| என்ன பழம் ? | மாம்பழம் → |  |
| என்ன மா ? | புளி மா → |  |
| என்ன புளி ? | கறிப்புளி → |  |
| என்ன கறி ? | மீன் கறி → |  |
| என்ன மீன் ? | சுறா மீன் → |  |
| என்ன சுறா ? | பாற் சுறா → |  |
| என்ன பால் ? | பசும் பால் → |  |

Miss.N.Thamilselvi ( National.Dip.In.Teaching.Primary)
Mn/Pappamoddai.R.C.T.M.School.

kalvi.lk

## 12. போக்குவரத்துக் குறியீடுகளை அறிந்து இணைப்போம்.

.

01. 


பாதசாரிகள் கடவை

02. 

முன்னால் சிறுவர் கடவை

03. 

பேருந்துத் தரிப்பிடம்

Miss.N.Thamilselvi ( National.Dip.In.Teaching.Primary)
Mn/Pappamoddai.R.C.T.M.School.

kalvi.lk

## 13. பின்வரும் கதையை அவதானித்து வினாக்களுக்கு விடை கூறுவார்.

கதை → 01

### அலட்சியம்

காட்டில் இரண்டு குரங்குக் குட்டிகள் வாழ்ந்து வந்தன. அவற்றில் ஒன்று மூத்தது. மற்றொன்று இளையது. இதிலே இளைய குரங்கு எந்த வேலையையும் யோசித்துச் செய்வதில்லை. மூத்த குரங்கு அப்படியல்ல. எந்த வேலையையும் செய்யுமுன் பல முறை சிந்திக்கும்.

அப்படித்தான் ஒரு நாள் அவை இரண்டும் மரம் விட்டு மரம் தாவிப் போய்க் கொண்டிருந்தன. திடீரென்று காற்று வேகமாக வீசத் தொடங்கியது. அப்பொழுது மூத்த குரங்கு இளைய குரங்கைப் பார்த்து ''தம்பி ! நாம் இப்போது இருக்கும் மரத்திலேயே இருப்போம். காற்றின் வேகம் குறைந்ததும் வேறு இடம் செல்வோம்'' என்றது.

அதைக் கேட்ட இளைய குரங்கு ''ஒவ்வொரு மரமாகத்தானே தாவ வந்தோம், இப்போது உங்களுக்கு என்ன நடந்தது'' என்று கேட்டது.

மூத்த குரங்கு இதற்கு ''தம்பி! எனக்கு ஒன்றும் நடக்கவில்லை; காற்று பலமாக வீசுகிறது; மரம் விட்டு மரம் தாவிச் செல்லும்போது நம் கைப்பிடி தவறி 'பொத்தென்று' கீழே விழுந்து விட்டால் என்ன செய்வது; அதற்காகத்தான் சொன்னேன்'' என்றது.

அதற்கு இளைய குரங்கு ''உங்களுக்குப் பயம் என்றால் இங்கேயே இருங்கள்; நான் தாவிச் செல்லப் போகிறேன்'' எனக் கூறியது.

மூத்த குரங்கு தம்பியைப் பார்த்து ''தயவுசெய்து நான் சொல்வதைக் கேள்; காற்று பலமாக வீசுகிறது; நீ கீழே விழுந்து, உனக்குப் பலமான காயம் ஏற்பட்டு விட்டால் என்னால் தாங்க முடியாது; தயவுசெய்து நான் சொல்வதைக் கேள்'' என்று கெஞ்சியது.''நீங்கள் என்ன சொன்னாலும் நான் கேட்க மாட்டேன்; என்னால் நீண்ட நேரம் இங்கு இருக்க முடியாது; நான் போகிறேன்'' என்று கூறிவிட்டு இன்னொரு மரத்திற்குத் தாவியது. காற்று பலமாக வீசியதால் மரக்கிளை அதன் கைப்பிடிக்குள் சிக்காமல் விலகியது. கைப்பிடி தவறிய இளைய குரங்கு பொத்தென்று தரையில் விழுந்தது. வலியால் துடித்தது. மூத்த குரங்கு மரத்திலிருந்து இறங்கி, அதன் அருகே சென்றது. கவலையுடன் அதனைத் தடவியது. நான் சொன்னபடி கேட்டிருந்தால் உனக்கு





இந்த நிலை ஏற்பட்டிருக்காதே எனக் கண் கலங்கியது.

Miss.N.Thamilselvi ( National.Dip.In.Teaching.Primary)
Mn/Pappamoddai.R.C.T.M.School.

## வினாக்கள்

01.இக்கதையில் வரும் விலங்கின் பெயர் என்ன?

02.குரங்குக் குட்டிகள் எங்கே வாழ்ந்கன?

03.எந்த வேலையையும் யோசித்துச் செய்யாத குரங்கு எது?

04.எந்த வேலையையும் யோசித்துச் செய்யும் குரங்கு எது?

05.குரங்குகள் எப்படித் தாவிப் பாயும்?

06.மூத்த குரங்கு இளைய குரங்கைப் பார்த்து என்ன கூறியது?

07.அதற்கு இளைய குரங்கு என்ன பதில் சொன்னது?

08. உனக்குப் பயம் என்றால் இங்கேயே இரு எனக் கூறிய குரங்கு எது?

09.இளைய குரங்கு எதனால் கீழே விழுந்தது?

Miss.N.Thamilselvi ( National.Dip.In.Teaching.Primary)
Mn/Pappamoddai.R.C.T.M.School.

kalvi.lk

**14. கதை - 02**

## கதை
### (நன்றி மறக்காத எறும்பு)

ஒரு கட்டெறும்பு தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்தது.
மரத்திலிருந்து இதைப் பார்த்த புறா ஒன்று மரத்திலிருந்த இலை ஒன்றைப் பறித்து நீரில் வீசியது.







எறும்பும் தத்தித் தத்தி வந்து அந்த இலையின் மேல் ஏறிக்கொண்டது. அந்த இலை காற்றில் அசைந்து மெதுவாகக் கரைப்பக்கம் ஒதுங்க, கரையில் ஏறி தப்பியது அந்த எறும்பு.

மற்றொரு நாள்.

ஒரு வேடன் அந்தப் புறாவைக் குறி வைப்பதைப் பார்த்தது அந்த எறும்பு.

ஆனால், புறாவோ இதை அறியாமல் வேறெங்கோ கவனமாக இருந்தது. அன்று தன்னைக் காப்பாற்றிய புறாவின் உயிரைக் காப்பாற்ற வேண்டியது தனது கடமையாக எண்ணியது எறும்பு.

விரைந்து சென்று வேடனின் காலில் நறுக்கென்று கடித்தது.

கடியின் வலி தாங்க முடியாமல் கத்திய வேடனின் குறி தப்பியது. சத்தத்தைக் கேட்டுத் திரும்பிய புறா தனக்கேற்படவிருந்த ஆபத்தை அறிந்து அந்த இடத்தை விட்டுப் பறந்தது.

அன்று புறா நமக்கென்ன என்று அலட்சியமாக இருக்காமல் உதவி செய்ததால்தான் புறாவின் உயிர் தப்பியது. அந்தச் சிறிய உருவம் கொண்ட எறும்பும் நன்றி மறக்காமல் செயல்பட்டது.

**ஒருவர் செய்த உதவியை நாம் மறக்கக் கூடாது.**


Miss.N.Thamilselvi ( National.Dip.In.Teaching.Primary)
Mn/Pappamoddai.R.C.T.M.School.


kalvi.lk

## 15. சிற்றுண்டிச்சாலை உணவுப் பட்டியலை வாசித்து அறிந்து கொள்வார்.

### சிற்றுண்டிச்சாலை உணவுப்பட்டியல் - 01

1. பயறு 
2. பிட்டு 
3. தோசை 
4. தேநீர் 
5. லட்டு 
6. வடை 
7. உப்புமா 
8. பால் 

Miss.N.Thamilselvi ( National.Dip.In.Teaching.Primary)
Mn/Pappamoddai.R.C.T.M.School.

kalvi.lk

# சிற்றுண்டிச்சாலை உணவுப்பட்டியல் - 02

1. பாயாசம் 

5..பாற்சோறு 

2. இடியப்பம் 

6. கடலை 

3. இட்லி 

7. அப்பம் 

4.. மோதகம் 

8. முறுக்கு 

Miss.N.Thamilselvi ( National.Dip.In.Teaching.Primary)
Mn/Pappamoddai.R.C.T.M.School.

kalvi.lk

✓ பின்வரும் உணவுகளுக்குப் பொருத்தமான பெயரை வட்டமிடுவோம்.

1. 

01.இடியப்பம் 02. இட்லி 03. தோசை

2. 

01. பயறு 02. கடலை 03. உழுந்து

3. 

01.இடியப்பம் 02. அப்பம் 03. ரொட்டி

4. 

01 .வடை 02. இட்லி 03. தோசை

Miss.N.Thamilselvi ( National.Dip.In.Teaching.Primary)
Mn/Pappamoddai.R.C.T.M.School.

kalvi.lk

## ✓. உணவுகளுக்குப் பொருத்தமான படங்களை இணைப்போம்.

1. இட்லி



2. பாயாசம்



3. கடலை



4. தேநீர்



5. உப்புமா



Miss.N.Thamilselvi ( National.Dip.In.Teaching.Primary)
Mn/Pappamoddai.R.C.T.M.School.

kalvi.lk